மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டா இப்போதுதான் வழங்கப்பட்டிருக்கிறது. முன்னுரிமை கொடுத்து, ஒவ்வொரு பகுதியாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அங்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படும்.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, பட்டா கொடுக்கப்பட்டவுடனே கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கூட இன்னும் வீடு கட்ட ஆரம்பிக்கவில்லை. ஆகவே விரைவில் நிதி ஒதுக்கீடு செய்து, முன்னுரிமை கொடுத்து, வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

கூடலூர், உதகை மலைவாழ் பழங்குடியினருக்குக் குடியிருப்புகள்.

586—(*வினா எண் 12964) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூடலூர், உதகை பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினருக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்; 1985-86 ஆம் ஆண்டு மற்றும் 1986-87 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் கூடலூர் மற்றும் உதகைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினருக்கு முறையே 60 வீடுகள் மற்றும் 50 வீடுகள் கட்ட வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைவாழ் பழங்குடியினருக்கு 110 வீடுகள் கூடலூரிலும் உதகையிலும் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எந்த எந்த இடத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா? சில ஆதிவாசிகள் காடுகளில் வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடிசைகள் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா? வனத்துறைக்குச் சொந்தமான இடங்களில்

1987 மே 4]

இப்படி வீடுகள் கட்டுவதை அவர்கள் தடுக்கிறார்கள். அதற்கு ஏதாவது பரிகாரம் கண்டு, வனத்துறையின் ஒத்துழைப்பைப் பெற்றோ அல்லது உத்தரவைப் பெற்றோ ஆதிவாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவரவர்களே, உதகையிலும் கூடலூரிலும் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; ஆனால் அந்த இரண்டு பகுதிகளிலும் எந்த எந்த இடம் என்ற விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஊட்டியைப் பொறுத்தவரையில் அங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் வனப் பகுதிகளில் வாழ்கிறார்கள். அந்த இடம் வனத்துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகவே சம்பந்தப் பட்ட வனத்துறை அமைச்சரிடம் கேள்வி போட்டால் அவர்கள் விவரமாகப் பதில் அளிப்பார்கள்.

(முற்பகல் 11-00)

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் வட்டத்தைப் பொறுத்தவரையில் பனியர் என்ற இனத் தைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 5,000 பேர்களுக்கு மேற் பட்டவர்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான உதவியும் செய்யவில்லை என்று நான் கருதுகிறேன். காரணம், அவர்கள் ஓரிடத்தில் நிரந்தர மாக இல்லாமல் காடுகளில் பல்வேறு பகுதிகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வீட்டுவசதி செய்து கொடுத்து, வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பட்டி யலில் அவர்கள் வருகிறபோது, இடம் இருக்குமேயானால் கட்டாய மாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். வசதிகள் அவர் களுக்குச் செய்து கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) ஜெயங்கொண்டான் மருத்துவமனையில் 'எக்ஸ்ரே' கருவி சரியாக இயங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ந. மாசிலாமணி அவர்கள் ஒரு பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்குப் பதிலாக திரு. எஸ். டேனியல்ராஜ் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். டேனியல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டான் அரசு மருத்துவமனையில் கடந்த சில மாதங்களாக எக்ஸ்ரே கருவி இயங்காததால் அப் பகுதி நோயாளிகள் படும் அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக் கிறேன்:

அறிக்கை.

ஜெயங்கொண்டான் மருத்துவமனையில் உள்ள 100 எம்.ஏ. ஊடுகதிர் இயந்திரம் செப்டம்பர் 1986-ல் பழுதுபட்டு சரிவர இயங்கவில்லை. அது உடனே பழுது செய்யப்பட்டு, அக்டோபர் 1986 முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஊடுகதிர் இயந் திரம் இப்பொழுது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. நோயாளி களுக்கு எக்ஸ்ரே மருத்துவமனையில் எடுக்கப்பட்டு வருகிறது. நோயாளிகளுக்குத் தேவைப்படும் சிகிச்சை அளிப்பதில் எவ்வித குறைபாடுகளும் இல்லை.

(ஆ) மண்டபத்திலுள்ள 'தமிழ்நாடு முத்து நிறுவனம்' செயல் படாமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, எம். செல்லமுத்து, கோ. வீரய்யன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர் அவர் களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.